# 7 அந்தப் புறாக்கள்



அவை ........
அழகான புறாக்கள்
அதிகாலை வரும்
காண்பதற்காகவே
கண் விழிப்பேன்
குழந்தை போல
குழைந்தெழுவான் சூரியன்
பிஞ்சுக் கதிர்களை பாய்ச்சுவான்
பாய்ச்சுவான்!

அவை......
முற்றத்தில் முனங்கிக் கொண்டே
இரைபொறுக்கும்!

பேசும் ....
கொஞ்சும்; குழையும்
கோபிக்கும், சிரிக்கும்
காலூன்றி ஓடும்!

மனித ஜோடியை விடவும்
அவை
மகத்தானவை
ஒற்றுமைக்கு
அதனிடம்
உபதேசம் கேட்கலாம்
அசைவிலும்
இசைவிலும்
ஒன்றோடொன்று
ஒத்து தான் போகும்!
இரண்டுந்தான்
இறங்கி வரும்
இரண்டுந்தான்
ஏறிப்பறக்கும்.!
வயிறு நிறைந்தால்
சொண்டுகளை முட்டிச்
சொல்லிக் கொள்ளும்!
பின்......

காதலிக்கத் தொடங்கும்!
கடிதங்கள் எழுதாது
கவிதைகள் எழுதாது
ஆனாலும்
காதலிக்கும்!

பேசும்......
கொஞ்சும்;
குழையும்;
சிரிக்கும்;
ஒரு நாளும்
காசு பற்றிக்கதைக்காது!

அழகு அந்தஸ்து
அதுவொன்றும் பார்க்காது!
நேசிக்கும்.......
நெருக்கமாகி நெருக்கமாகி
நேசிக்கும்;

வாருங்கள்
வசந்தத்தைத்தொலைத்த
மனுசர்களே
என்
வாசலுக்கு;
இந்த ஜோடிப்புறாக்களிடம்
ஜோதிடம் கேளுங்கள்!
அன்புக்கு
அர்த்தஞ் சொல்லும்
பாசத்திற்கு பாடம்சொல்லும்;
மனித ஜோடியைவிடவும்
அவை
மகத்தான ஜோடி!

**-ச.பன்னீர்-**
**(புதிய தலைமுறை)**

## கிரகித்தல் பயிற்சி

1. மனிதர்கள் புறாக்களிடம் கற்றுக் கொள்ள வேண்டியவைகள் யாவை?
2. கவிஞர் அதிகாலையில் கண் விழிப்பதற்கான காரணம் என்ன?
3. இக்கவிதையில் இடம்பெற்றுள்ள உவமையணி எது?
4. "மனித ஜோடியை விடவும் அவை மகத்தான ஜோடி" எனக் கவிஞர் கூறியுள்ள கருத்து பொருத்தமானதா? காரணம் கூறுக?
5. புறாவின் செயற்பாடுகளைக் கவிஞர் எவ்வாறு குறிப்பிடுகிறார்.

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

1. இக்கவிதையை வாசிக்கும் பொழுது உங்கள் மனதில் ஏற்பட்ட உணர்வுகளை எழுதுக.
2. உங்கள் வீட்டு முற்றத்துக்கு வரும் பறவைகளின் இயல்புகளை அவதானித்து கவிதையாக்குங்கள்.
3. பறவைகளின் இயல்புகளை வெளிப்படுத்திய ஆக்கங்களை சேகரியுங்கள்.
4. பறவைகளின் இயல்புகளைத் தொகுத்து ஒப்படை ஒன்று தயாரிக்குக.

## அணி

புலவர்கள் தம் மனத்தில் தோன்றும் கருத்துகளை தம் கற்பனைத் திறத்தாலும் அனுபவத்தின் முதிர்ச்சியாலும் புலமைப் பெருமையாலும் சொல்லழகு, பொருளழகு, உணர்ச்சி நுட்பம் முதலானவை ஒரு சேரப் பாடல் இயற்றும் பான்மையினை விரித்து விளக்குவதே அணியாகும். இவ்வணிகள் பலவகைப்படும். இவற்றுள் உவமையணி, உருவக அணி பற்றி நோக்குவோம்.

### உவமையணி

இரண்டு பொருள்கள் அல்லது செயல்களுக்கு இடையே உள்ள ஒப்புமை வெளிப்பட்டுத் தோன்றுமாறு கூறுவது உவமை அணியாகும். இதில் ஒரு பொருளைப் போல் மற்றொன்று உள்ளது எனக் கூறல் வேண்டும்.

(உ + ம்)
- தாமரை போன்ற முகம்.
- புலி போலப் பாய்ந்தான்.
- ஏறு போன்ற நடை.

### உருவக அணி

உவமானமும் உவமேயமும் வெவ்வேறு பொருள் எனத் தோன்றாது ஒன்றுபோல் காட்டி உவமானத்தின் தன்மை முழுவதும் உவமேயத்தில் கரைந்து நிற்குமாறு கூறுவதே உருவக அணி ஆகும்.

(உ + ம்)
- கைம்மலர் - கை ஆகிய மலர்
- முகமதி - முகம் ஆகிய மதி

## இலக்கணம்

### ஏவல் வினை முற்று

முன்னிலையின் இருப்போரை நோக்கி ஒரு வினையை அல்லது செயலை நிகழ்த்துமாறு ஏவுவதற்கு அல்லது கட்டளையிடுவதற்குப் பயன்படும் வினைவடிவம் ஏவல் வினை எனப்படும்.

**(உ + ம்)**

நில், ஓடு, படி, எழுது, பார்
படிக்காதே, போகாதே, செய்யாதே
பாருங்கள், ஓடுங்கள், நில்லுங்கள், செய்யுங்கள்
ஓடாதீர்கள், செல்லாதீர்கள், விடாதீர்கள்

### வியங்கோள் வினைமுற்று

ஒருவரை வாழ்த்துவதற்கு எதிர்ப்பை அல்லது வெறுப்பைத் தெரிவிப்பதற்கு வினையமாக வேண்டிக் கொள்வதற்கு பயன்படும் வினைவடிவம் வியங்கோள் வினை எனப்படும்.

**(உ + ம்)**

| | | |
|---|---|---|
| வாழ்க | பெறுக | மலர்க |
| வளர்க | வீழ்க | ஒழிக |
| எழுக | அழிவு செய்க | |
| எழுதுக | கூறுக | |

### உடன்பாட்டுவினைமுற்று

ஒரு செயல் நிகழ்ந்ததை உணர்த்தும் வினைச் சொற்கள் உடன்பாட்டு வினைமுற்று எனப்படும்.

**(உ + ம்)**

- வந்தேன்
- எழுதினேன்
- வரைந்தேன்

## எதிர்மறைவினைமுற்று

ஒரு செயல் நிகழாமையை உணர்த்தும் வினைச் சொற்கள் எதிர்மறை வினைமுற்றுக்கள் எனப்படும்.

**(உ + ம்)**

- போகவில்லை
- படிக்கவில்லை
- வராது
- செல்லாது
- போகமாட்டேன்

### பயிற்சி

*ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையிலான வேறுபாட்டை ஆசிரியருடன் கலந்துரையாடுக.*